முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா:

# மதுரை மாநகரில் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி அறிக்கை!



மதுரை, மே 31-

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு வளர்ச்சிக்காக ஓய்வில்லாது உழைத்த உழைப்பாளி சாமானிய அடித்தட்டு மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்கள் கொண்டுவந்து நாடே போற்றுகின்ற ஒப்பற்ற முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா ஜூன் -3சனிக்கிழமை அன்று காலை 8 மணிக்கு சிம்மக்கல் ரவுண்டானா - வடக்கு வெளி வீதியில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட உள்ளது. இந்நிகழ்வில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக, ஒன்றிய பேரூர் கிளை செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன். மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் நூற்றாண்டு விழாவை சிறப்பான முறையில் கொண்டாடும் வகையில் பகுதி கழக, வட்ட கழக, ஒன்றிய பேரூர் கிளை தோறும் நமது இரு வண்ண கொடிகள் ஏற்றி ஒலி பெருக்கி அமைத்து, படத்திற்கு மாலை அணிவித்து, மரக்கன்றுகள் நட்டும், இனிப்புகள் வழங்கியும், மாபெரும் அன்னதானங்கள் வழங்கியும், முதியோர் இல்லங்கள் காப்பகங்களில் அறுசுவை உணவு வழங்கியும், அந்த இல்லங்களுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கியும், ஏழை எளிய சாமானியர்கள் பயன்படுகின்ற வகையில் நலத்திட்டங்களை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு:காலை8.00மணி அளவில் தலைவர் கலைஞர் அவர்களின்திருவுருவச்சிலை முன்பு 3000பேருக்கு அன்னதானம் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, வடக்குச்செவல் கிராமத்தில் தனது நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 30 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்தை பயன்பாட்டிற்கு திருமிகு கனிமொழி கருணாநிதி திறந்து வைத்தார். தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும் முன்னதாக, அப்பகுதியில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான பெ.கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, ஒன்றிய செயலாளர் சின்ன மாரிமுத்து மற்றும் தி.மு.க. கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கழக துணைப் பொதுச் செயலாளர்

# ஆ.இராசா எம்.பி. மனைவி மு.அ.பரமேஸ்வரி 2ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சி!

## நினைவிடத்தில் ஆ.இராசா எம்.பி. - அமைச்சர் சா.சி.சிவசங்கர் - சி.வெ.கணேசன் மலரஞ்சலி!

பெரம்பலூர்,மே 31-

கழக துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா. எம்.பி., மனைவி மு.அ.பரமேஸ்வரி அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்டம், வேலூர் கிராமத்தில் உள்ள அவரது சமாதியில், கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்பி., மயூரி இராசா, போக்குவரத்துத் துறை அமைச்சர் சி.சி.சிவசங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் கலந்து கொண்டு

மலரஞ்சலி செலுத்தினார்கள்.

இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகர் (திருவையாறு), வசந்தம் கார்த்திகேயன் (ரிஷிவந்தியம்), (சாக்கோட்டை அன்பழகன் (கும்பகோணம்), எம்.பிரபாகரன்(பெரம்பலூர்), கா.சொ.க.கண்ணன் (ஜெயங்கொண்டம்), கு.சின்னப்பா(அரியலூர்), மாவட்ட கழக செயலாளர்கள் குன்னம் சி. இராஜேந்திரன், ஆ.இராசா குடும்ப உறுப்பினர்கள் மயூரி இராசா, ஆ.ராமச்சந்திரன், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் ஆ.கலியபெருமாள், ஆ.சிவசண்முகம்,

வேலூர் ஊராட்சி மன்ற தலைவர் அம்பிகை சிவசண்முகம், ஆசிரியர் ரா. பச்சமுத்து, விஜயாம்பாள் பச்சமுத்து, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பொறியாளர் இரா. ப.பரமேஷ்குமார், ரெங்கராஜ், கமலா ரெங்கராஜ், உயர்நீதிமன்ற அரசு சிறப்பு வழக்கறிஞர் டி.சீனிவாசன், பெரம்பலூர் அரசு வழக்கறிஞர் சந்தானலெட்சுமி, ஐ.ஜே.கே.தலைவர்

ரவி பச்சமுத்து, மாவட்ட ஆட்சித்தலைவர் க.கற்பகம், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஷ்யாமளாதேவி, மாநிலங்களை உறுப்பினர் ஏ.எம்.அப்துல்லா, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, கழக சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் சுபா.சந்திரசேகர், மின்னம்பலம் ஆசிரியர் அ.காமராஜ், தொழிலதிபர்கள் அஸ்வின் கணேசன், சுப்புடு, மாநில வர்த்தக அணி துணை செயலாளர் ஐ. கென்னடி, வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா,

மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி,டாக்டர் செ.வல்லபன், வி.எஸ். பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், என்.ஜெகதீஸ்வரன், எஸ். அண்ணாதுரை, பட்டுச் செல்வி ராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத்,

மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், வழக்கறிஞர் சந்திரமோகன்,

தமிழக சிறப்பு டெல்லி வழக்கறிஞர் துரை.குமணன்,

ஒன்றிய கழக செயலாளரகள் என். கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லத்தம்பி, தி.மதியழகன், வீ.ஜெகதீசன், சோமு.மதியழகன், சி.ராஜேந்திரன், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் முத்தமிழ்செல்வி மதியழகன், ஒன்றிய பெருந்தலைவர்கள் மீனா அண்ணா துரை,

பிரபா செல்லப் பிள்ளை, க.ராமலிங்கம், துணை பெருந்தலைவர்கள் சாந்தாதேவிகுமார், எம்.ரெங்கராஜ், பேரூர் கழக செயலாளர்கள் எம். வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலட்சுமி சேகர்,ஜாஹிர் உசேன், பேரூராட்சி தலைவர்கள் சங்கீதா ரமேஷ், வள்ளியம்மை ரவிச்சந்திரன், பாக்கியலட்சுமி செங்குட்டுவன், துணை தலைவர்கள் செல்வலட்சுமி சேகர், எ.ரசூல்அகமது, சரண்யா, சென்னை தொ.மு.ச. தலைவர் ராஜகாந்தம், கோயம்புத்தூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் சி. ராமச்சந்திரன்,

நீலகிரி மாவட்ட துணைச்செயலாளர் ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் நாசர்அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திராவிடமணி, நீலகிரி அரசு குற்றவியல் வழக்கறிஞர் ஆனந்தன், வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ஸ்ரீ.ஜோஸ், முன்னாள் சேர்மன் அமிர்தலிங்கம், உடுமலைப் பேட்டை நகர் மன்ற முன்னாள் தலைவர் வேலுச்சாமி,

கூடலூர் நகரச்செயலாளர் இளஞ்செழியன், கூடலூர் பொதுக்குழு உறுப்பினர் சீனி, நீலகிரி நகர் மன்ற உறுப்பினர் விசாலாட்சி, ஊட்டி விஜி, கூடலூர் நகர் மன்ற உறுப்பினர் வெண்ணிலா, தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.எஸ். சத்தியமங்கலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எல்.பி.தர்மலிங்கம், பொதுக்குழு உறுப்பினர் பந்தலூர் ராஜ்குமார், காரமடை ஒன்றிய கழக செயலாளர் எஸ்.எம்.டி. ஆறுமுகம், காரமடை நகர கழக செயலாளர் வெங்கடேஷ், மற்றும் கல்யாணசுந்தரம் வெங்கடேஷ், மேட்டுப் பாளையம் நகர கழக செயலாளர் முனுசாமி, மேட்டுப்பாளையம் இளைஞரணி அமைப்பாளர் அஷ்ரப்,

சத்தியமங்கலம் நகராட்சி தலைவர் ஜானகி, புஞ்சைபுளியம்பட்டி நகர கழக செயலாளர் சிதம்பரம்,அன்னூர் ஒன்றிய கழக செயலாளர் மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் சாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர் சரவணன் நம்பி, சிறுமுகை பேரூர் கழக செயலாளர் உதயகுமார், தாளவாடி குப்புராஜ், அவிநாசி ஒன்றிய கழக செயலாளர்கள் பால்ராஜ், சிவப்பிரகாசம்,

பெரம்பலூர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆர்.முருகேசன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளரும் அரசு குற்றவியல் வழக்கறி ஞர் பா.செந்தில் நாதன்,

ஈரோடு, திருப்பூர், அரியலூர் மாவட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் 1,000 பேருக்கு பொற்கிழி!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! தே.மதியழகன் அறிவிப்பு!

கிருஷ்ணகிரி, மே 31 -

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட அவைத்தலைவர் டி.ஏ.நாகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சரும், ஓய்வறியா உழைப்பாளியுமான தளபதியார் அவர்கள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களது திருக்கரங்களால் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மூத்த முன்னோடிகள் 1000 பேருக்கு பொற்கிழி வழங்குவது

தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் சிறப்பாக கொண்டாடுவது, எனவும் ஜூன் 3 ம் தேதி சென்னை, வட சென்னையில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகள், தொண்டர்கள் பெரும் திரளாக கலந்து கொள்வது.

இளைஞர்களை ஊக்குவிக்கும் சீரிய நோக்கில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள், கல்லூரி, பள்ளி மாணவ, மாணவிகளின் திறமையை மேம்படுத்தும் வகையில் பேச்சுப்போட்டி, கட்டுரை போட்டி, ஓவியப் போட்டிகளை நடத்தி பரிசுகள் வழங்கி ஊக்குவிக்கப்படும் எனவும்

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒன்றிய அளவிலான கிரிக்கெட் போட்டி, கால்பந்தாட்டப் போட்டி, ஹாக்கி போட்டி உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகளை நடத்தி ஒன்றியளவில் வெற்றி பெறும் அணிகளை கொண்டு மாவட்ட அளவிலான போட்டிகளை நடத்தி பரிசுகள் வழங்கி இளைஞர்களை ஊக்குவிக்கும் பணியினை மேற்கொள்வது .

ஜூன் 20 ஆம் தேதி திருவாரூரில் பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள் கலந்து கொண்டு "கலைஞர் கோட்டத்தை" திறந்து வைக்க உள்ளார். இந்த விழா முழு நாள் நிகழ்வாக கவியரங்கம், பட்டிமன்றம், பொதுக் கூட்டம் உள்ளிட்ட பல வேறு நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நடைபெற இருப்பதால் இந்த விழாவில் பெரும்திரளாக கலந்து கொள்வதெனவும் இந்த கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி , சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செந்தில் , பரிதா நவாப் , கிருபாகரன் , பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன் , அஸ்லாம் , நாகராசன் , கோதண்டன் , சித்ரா சந்திரசேகர் , கிருஷ்ணகிரி நகர செயலாளர் நவாப் , ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன் , தனசேகரன் , சுப்பிரமணி , மகேந்திரன் ,சாந்தமூர்த்தி ,ராஜேந்திரன் ,அறிஞர் ,நரசிம்மன் , குணவசந்தரசு , எக்கூர் செல்வம் , ரஜினி செல்வம் , குமரேசன்

பேரூர் கழக செயலாளர்கள் பாபு , வெங்கடப்பன், பாபு சிவகுமார், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# சென்னை மாநகராட்சியில் மக்களைத் தேடி மேயர்!

சென்னை, மே 30-

பெருநகர சென்னை மாநக ராட்சிக்குட்பட்ட பகுதிக ளில் உள்ள பொது மக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்களின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து குறைகளை களையும் பொருட்டு, "மக்களைத் தேடி மேயர்" திட்டம் 3.5.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, மண்டலம் 5க்குட்பட்ட பொது மக்களிடமிருந்து கோரிக்கை கள் பெறப்பட்டு நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த சிறப்பு முகாமில் சாலை வசதி, பள்ளிக்கூடத்தில் கட்டிட வசதி, சமுதாயக்கூடம் மேம்பாடு, மழைநீர் வடிகால் வசதி, குடியிருப்பு வசதி, பிறப்பு/இறப்பு சான்றிதழ் உள்ளிட்ட பொது மக்களிடமிருந்து பெறப்பட்டு ஏற்கப்பட்ட 331 கோரிக்கை மனுக்களில் 272 மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காணப்பட்டுள்ளது. இதர கோரிக்கை மனுக்கள் தொடர்புடைய துறைகள் வாயிலாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனுப்பப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, "மக்களைத் தேடி மேயர்" திட்டத்தின் கீழ், திரு. வி.க.நகர் மண்டல அலுவலகத்தில் 31.05.2023 அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை மேயர் ஆர்.பிரியா மண்டலம் 6க்குட்பட்ட பொதுமக்களிடமிருந்து நேரடியாக கோரிக்கை மனுக்களைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்கிறார்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6க்குட்பட்ட பொதுமக்கள் இந்த வாய்ப்பினைப் பயன் ன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

# ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் வாரியாக தொடர் தெருமுனைக் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் அறிவிப்பு!



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் வாரியாக தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மாநில இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி சாதனை விளக்க தொடர் தெருமுனைக் கூட்டங்கள் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறும்.

| நாள்: 31.05.2023 | | |
|---|---|---|
| தோவாளை கிழக்கு ஒன்றியம் | மாலை 5.00 மணி, இறச்சகுளம் சந்திப்பு | திரு. எஸ்.கே. ரஹ்மான் |
| அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம் | மாலை 5.00 மணி, அஞ்சுகிராமம் சந்திப்பு | திரு. திட்டுவிளை சுந்தர் |
| நாகர்கோவில் கிழக்கு பகுதி | மாலை 5.00 மணி, மீனாட்சிபுரம் சந்திப்பு | திரு. ஜஸ்டின் வில்பிரட் |
| இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியம் | மாலை 5.00 மணி, ஈத்தமொழி சந்திப்பு | திரு. செல்வ கணபதி |
| குருந்தன்கோடு கிழக்கு ஒன்றியம் | மாலை 5.00 மணி, குருந்தன்கோடு சந்திப்பு | திரு. குமரி பிரபாகரன் |
| தக்கலை தெற்கு ஒன்றியம் | மாலை 5.00 மணி, பள்ளியாடி சந்திப்பு | திரு. போலீஸ் ஆல்பிரட் தாஸ் |
| இராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றியம் | மாலை 5.00 மணி, மேலசங்கரன்குழி சந்திப்பு | திரு. சி. செல்வகுமார் |
| நாள்: 01.06.2023 | | |
| தோவாளை கிழக்கு ஒன்றியம் | மாலை 5.00 மணி, தாழக்குடி சந்திப்பு | திரு. எஸ்.கே. ரஹ்மான் |
| தோவாளை வடக்கு ஒன்றியம் | மாலை 5.00 மணி, துவரங்காடு சந்திப்பு | திரு. திட்டுவிளை சுந்தர் |
| நாகர்கோவில் வடக்கு பகுதி | மாலை 5.00 மணி, கிறிஸ்துநகர் சந்திப்பு | திரு. ஜஸ்டின் வில்பிரட் |
| இராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றியம் | மாலை 5.00 மணி, ஆலங்கோட்டை சந்திப்பு | திரு. செல்வ கணபதி |
| குருந்தன்கோடு மேற்கு ஒன்றியம் | மாலை 5.00 மணி, வில்லுக்குறி சந்திப்பு | திரு. குமரி பிரபாகரன் |
| அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம் | மாலை 5.00 மணி, மகாராஜபுரம் | திரு. போலீஸ் ஆல்பிரட் தாஸ் |
| இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியம் | மாலை 5.00 மணி, பறக்கை சந்திப்பு | திரு. சி. செல்வகுமார் |
| குளச்சல் நகரம் | மாலை 5.00 மணி, குளச்சல் அண்ணாசிலை அருகில் | திரு. எப்.எம். இராஜரத்தினம், Ex. MLA |
| நாள்: 02.06.2023 | | |
| தோவாளை வடக்கு ஒன்றியம் | மாலை 5.00 மணி, அருமநல்லூர் சந்திப்பு | திரு. எஸ்.கே. ரஹ்மான் |
| நாகர்கோவில் மேற்கு பகுதி | மாலை 5.00 மணி, சுங்கான்கடை சந்திப்பு | திரு. திட்டுவிளை சுந்தர், திரு. ஜஸ்டின் வில்பிரட் |
| தக்கலை தெற்கு ஒன்றியம் | மாலை 5.00 மணி, இரணியல் சந்திப்பு | திரு. செல்வ கணபதி |
| குருந்தன்கோடு மேற்கு ஒன்றியம் | மாலை 5.00 மணி, உடையார்விளை சந்திப்பு | திரு. குமரி பிரபாகரன் |
| குருந்தன்கோடு கிழக்கு ஒன்றியம் | மாலை 5.00 மணி, மணவாளக்குறிச்சி சந்திப்பு | திரு. போலீஸ் ஆல்பிரட் தாஸ் |
| அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம் | மாலை 5.00 மணி, தேரூர் சந்திப்பு | திரு. சி. செல்வகுமார் |

**ரெ.மகேஷ்**
செயலாளர்
கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் -

# மாவட்ட ஒன்றியங்களில் பால் கொள்முதல் குறித்த ஆய்வுக்கூட்டம்!

## அமைச்சர் மனோ தங்கராஜ் தலைமை!

சென்னை, மே 31-

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் பால் கொள்முதல் மற்றும் இடு பொருள் பிரிவுகளுக்கான ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (29.5.2023) சென்னை நந்தனம் ஆவின் இல்லத்தில் நடைபெற்றது.

இதில் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பித்தார்.

அனைத்து தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிலும் செயற்கை முறை கருவூட்டல்வசதிகளைவிரிவாக்கம் செய்தல். பால் உற்பத்தியாளர்கள் அனைவருக்கும் அவர்கள் வழங்கும் பாலுக்குரிய ஒப்புகைச் சீட்டு வழங்குதல். பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

மாதிரி பசுந்தீவனப் பண்ணைகளை ஒவ்வொரு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் உருவாக்குதல். பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு தரமான கலப்புத் தீவனம் வழங்குதல். களப்பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்குதல்.

அரசின் திட்டங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ளுதல். பால் உப பொருட்கள், கால்நடை கலப்பு தீவனம், பால் பண்ணையில் ஆட்டோமேஷன் போன்ற பணிகளுக்கு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆய்வகங்கள் நிறுவுதல்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், பால்வளத் துறை இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.வினீத், மாவட்ட ஒன்றியங்களில் பணிபுரியும் பால் கொள்முதல் மற்றும் இடுபொருள் பிரிவு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் தேனி வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் அவைத் தலைவர் பி.டி,செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. இதில் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ் செல்வன் சிறப்புரையாற்றினார். இந்த கூட்டத்தில்சரவணகுமார் எம்.எல்.ஏ. மற்றும் ஒன்றிய செயலாளர்கள், நகர செயலாளர்கள். பேரூர் கழக செயலாளர். மாநில. மாவட்ட நிர்வாகிகள். தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.